# திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டங்களின் ஒன்றிய- நகர - பகுதி - பேரூர்க் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!





திண்டுக்கல், செப். 1-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறவுள்ளது.

கூட்டம் நடைபெறும் ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் நாள் நேரம் இடம் விவரம் வருமாறு

**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்**

நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம், அம்மையநாயக்கனூர்பேரூர், நிலக்கோட்டை தெற்கு ஒன்றியம், நிலக்கோட்டை பேரூர், நிலக்கோட்டை வடக்கு ஒன்றியம்-02.09.24, திங்கள்-காலை 10.00 மணி - நிலக்கோட்டை, எஸ்.எல்.மஹால்

வத்தலக்குண்டு தெற்கு ஒன்றியம், வத்தலக்குண்டு வடக்கு ஒன்றியம், வத்தலக்குண்டு பேரூர், சேவுகம் பட்டி பேரூர், பட்டிவீரன் பட்டி பேரூர் - 02.09.24, திங்கள் - மாலை 4.00 மணி - வத்தலக்குண்டு, பெரியகுளம் ரோடு, கணேஷ் மஹால்

கொடைக்கானல் நகரம், கொடைக்கானல் மேல் மலை, கொடைக்கானல் கீழ் மலை ஒன்றியம், பண்ணைக்காடு பேரூர் - 03.09.24, செவ்வாய் - காலை 10.00 மணி -கொடைக்கானல், ஆதித்த னார் மண்டபம்.

பழனி கிழக்கு ஒன்றியம், ஆயக்குடி பேரூர், பழனி மேற்கு ஒன்றியம், பாலசமுத்திரம் பேரூர், நெய்க்காரப்பட்டி பேரூர், பழனி நகரம் - 03.09.24, செவ்வாய் - மாலை 4.00 மணி - பழனி, கொடைக்கானல் ரோடு, பால் பண்ணை அருகில் விவாஹா மஹால்.

ஆத்தூர் மேற்கு ஒன்றியம், அய்யம்பாளையம் பேரூர், சித்தையன் கோட்டை பேரூர், ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், சின்னாளபட்டி பேரூர் - 04.09.24, புதன்காலை 10.00 மணி - சின்னாளபட்டி, பேருந்து நிலையம், விஜய மஹால்.

ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியம், கன்னிவாடி பேரூர், ரெட்டியார் சத்திரம் வடக்கு ஒன்றியம், ஸ்ரீராமபுரம் பேரூர் - 04.09.24 புதன் - மாலை 4.00 மணி -ரெட்டியார்சத்திரம், பெருமாள் கோவில் திருமண மண்டபம்.

திண்டுக்கல் தெற்கு ஒன்றியம், திண்டுக்கல் வடக்கு ஒன்றியம், தாடிக்கொம்பு பேரூர், அகரம் பேரூர் - 06.09.24, வெள்ளி - காலை 10.00 மணி - திண்டுக்கல், வத்தலக்குண்டு ரோடு, சி.கே.சி.எம். மஹால்.

திண்டுக்கல் மாநகரம் கிழக்கு பகுதி - திண்டுக்கல் மாநகரம் வடக்கு பகுதி - திண்டுக்கல் மாநகரம் தெற்கு பகுதி, திண்டுக்கல் மாநகரம் மேற்கு பகுதி - 06.09.24, வெள்ளி - மாலை 4.00 மணி - திண்டுக்கல், நத்தம் ரோடு, மகாலிங்க நாடார் திருமண மண்டபம்.

மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் - 09.09.24, திங்கள் - காலை 10.00 மணி - திண்டுக்கல், நந்தவனம் ரோடு, தரகுமண்டி குமாஸ்தாக்கள் மண்டபம்.

**திண்டுக்கல் மேற்கு மாவட்டம்**

31.08.24 சனி - காலை 10.00 மணி - ஒட்டன்சத்திரம் வடக்கு, தெற்கு - காமாட்சி திருமண மண்டபம் ஒட்டன்சத்திரம் பகல் 1.00 மணி - தொப்பம்பட்டி கிழக்கு, மேற்கு பழனி கிழக்கு, கீரனூர் மேற்கு வேல் மஹால் தொப்பம் பட்டி

01.09.24 ஞாயிறு - காலை 11.00 மணி - ஒட் டன்சத்திரம் நகரம் - காமாட்சி திருமண மண்டபம் ஒட்டன்சத்திரம், பகல் 2.00 மணி - சாணார்பட்டி வடக்கு, தெற்கு - ரெங்கா மஹால் கோபால்பட்டி , மாலை 4.00 மணி -

நத்தம் வடக்கு, தெற்கு, நத்தம் பேரூர் - சமுதாயக்கூடம் (அம்மா மண்டபம்) நத்தம் பேரூர்

02.09.24 திங்கள் - காலை 10.00 மணி - வேடசந்தூர் வடக்கு, தெற்கு வேடசந்தூர் பேரூர், எரியோடு பேரூர் - எம்.பி. மஹால் வேடசந்தூர் மதியம் 2.00 மணி - குஜிலியம்பாறை வடக்கு, தெற்கு பாளையம் பேரூர் - தங்கம் மஹால் பாளையம் மாலை 5.00 மணி - வடமதுரை கிழக்கு, மேற்கு வடமதுரை பேரூர், அய்யலூர் பேரூர் - குமரன் மகால் வடமதுரை

03.09.24 செவ்வாய் - காலை 11.00 மணி - திண்டுக்கல் தெற்கு - மகாலிங்க நாடார் திருமண மண்டபம் நத்தம் ரோடு, திண்டுக்கல்

சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் கூட்டத்தினை சிறப்பாக ஏற்பாடு செய்து அனைத்து கழக உடன்பிறப்புகள், கழக முன்னோடிகள் என கழக பொது உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளச் செய்து சிறப்பாக நடத்திடுமாறும், மேலும் இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட நிர்வாகிகள், தலைமை பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை மற்றும் வார்டு நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், ஊரக மற்றும் நகரப்புற உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், கழக முன்னோடிகள் என கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்திடு மாறு கேட்டுக் கொள்கி றோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தஞ்சை வடக்கு மாவட்டம்

# திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## சு.கல்யாணசுந்தம் எம்.பி.- செ.இராமலிங்கம் - அரசு கொறடா கோவி செழியன் முன்னிலை!

தஞ்சை, செப்.1,

தஞ்சை வடக்கு மாவட்டம், திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (1.9.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு டைமண்ட் மஹால் , பந்தநல்லூரில் ஒன்றிய அவைத் தலைவர் வி.ஜெய பாண்டியன் தலைமையில் நடைபெறுகின்றது.

இக் கூட்டத்தில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி., தலைமைச் செயறுகுழு உறுப்பினர், முன்னாள் எம்.பி.செ.இராமலிங்கம், அரசு தலைமை கொறடா கோவி செழியின் ஆகியோர் முன்னிலையில் இக் கூட்டம் நடைபெறுகின்றது.

இதில் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்துணைப் பெருந்தலைவர் கோ.க.அண்ணாதுரை, மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் உதயா இரவிச் சந்திரன், ஒன்றியப் பெருந் தலைவர் தேவி ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ஜி.கலியமூர்த்தி, ஒன்றியக் கழக நிர்வாகிகள் இ.சுவாமிநாதன், சி.பீமாராவ், வடிவழகி முருகேசன், ஏ.முகமது ரிபாய், மாவட்டப் பிரதிநிதிகள் எம்.இராவணன், பத்ம.பாரி, பி.பாலகுரு உள்பட ஊராட்சி கழக செயலாளர்கள், வார்டு கழகச் செயலாளர்கள், ஒன்றியப் பிரதிநிதிகள், சார்பு அணிகளின்அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். அதுபோது முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக முப்பெரும் விழா, உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கல், குடும்பம் வாரியாக ஓ.எம். ஆர்.ஷீட் மற்றும் பி.எல்.சி. கையேடு தலைமையிடம் ஒப்படைத்தல் சம்பந்தமாக மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவிருக்கிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் ஒன்றியச் செயலாளர் மிசா.என்.மனோகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை ஏற்பாட்டில்

# பூவிருந்தவல்லி நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. சிறப்புரை! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர், செப். 01

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. பூவிருந்தவல்லி நகர தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் கரையான் சாவடியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், நகர்மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் ஸ்ரீதர், நகர அவைத் தலைவர் எச். தாஜுதீன், நகர நிர்வாகிகள் துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணிமலர்மன்னன், அசோக் குமார், மாவட்ட பிரதிநிதிகள் ஜெ.சுதாகர், புண்ணிய கோட்டி, அன்பழகன், சௌந்தர்ராஜன், ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்.

மேலும், மாவட்ட துணை செயலாளர் காயத்ரி ஸ்ரீதர், ப.ச.கமலேஷ். தி. வே. முனுசாமி, ஒன்றியக் குழு துணைத்தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ., ஆதிதிராவிடர் நலக் குழு மாநில செயலாளர் ஆகிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. பேசியதாவது:

நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் அதிக வாக்கு வித்தியாசத்தில் கூட்டணி வெற்றி வேட்பாளரை வெற்றி பெற செய்த கழக நிர்வாகி அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த சட்டமன்ற தேர்தலில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெற்றதற்கு காரணம் அனைவரின் உழைப்பும் தான். அதேபோல நாடாளுமன்ற தேர்தலி லும் கூட்டணி கட்சி வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்துள்ளோம்.

நமது தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டுவந்த மக்கள் நலத்திட்டங்கள்தான் இதற்கு காரணம். எனவே தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் மக்களுக்கான திட்டங்கள் குறித்து மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

வரும் சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாட்டில் 200-க்கும் மேற்பட்ட இடங்களில் தி.மு.க. வெற்றி பெற இன்றே பணிகளை நாம் தொடங்க வேண்டும்.

அதேபோல முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்த வேண்டும். இளைஞரணியில் அதிக அளவில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும்.

பூவிருந்தவல்லி நகரத்தில் உள்ள வார்டுகளில் கிளை கழக கூட்டத்தை நடத்திட வேண்டும் என பேசினார்.

இந்த கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கே.ஜே. ரமேஷ், சி.ஜெரால்டு, பிரபு கஜேந்திரன், ம.ராஜி, வி. ஜெ.சீனிவாசன். எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார். த.எத்திராஜ், எம். முத்தமிழ்செல்வன், வி.குமார், இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், வழக்கறிஞர் மாரிமுத்து, வி.தியாகராஜன், ஏ.ஜி.ரவி, டி.குமரேசன், பெ.வினோத், விமல் ஆனந்த், ஷாஜகான், எம். இளையான், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், நிர்மல் ராஜ் மற்றும் ஒன்றிய நகர, பேரூர், கிளை வட்ட நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வட்ட செயலாளர்கள் உமாசங்கர், யுவராஜ் பாபு ஆகியோர் நன்றி கூறினர்.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் கா.காஜா முகைதீன் தலைமையில் மேலாண்மை இயக்குநர் தி.என்.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் முன்னிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் கடனுதவி திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் 29.08.2024 அன்று நடைபெற்றது. தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர்.சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு). டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்). க.அன்பழகன் (கும்பகோணம்), என். அசோக்குமார் (பேராவூரணி), முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்),மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன் (தஞ்சாவூர்), க. சரவணன் (கும்பகோணம்), மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர்தெ.தியாகராஜன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பகுதி வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.08.2024 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பொது உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறும் விவரம்:

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 01.09.2024 (ஞாயிறு) | காலை 10.00 மணி | அம்பத்தூர் தெற்கு பகுதி | SAS திருமண மண்டபம், திருவல்லீஸ்வரர் நகர் |
| | காலை 11.00 மணி | எழும்பூர் வடக்கு பகுதி | லட்சுமி மகால், P.B.ரோடு |
| 02.09.2024 (திங்கள்) | மாலை 7.00 மணி | எழும்பூர் தெற்கு பகுதி | S.R.மகால் இராட்லர் தெரு, சூளை |
| | மாலை 8.00 மணி | அம்பத்தூர் வடக்கு பகுதி | HPM பாரடைஸ், அம்பத்தூர் |
| 03.09.2024 (செவ்வாய்) | மாலை 6.30 மணி | கொளத்தூர் கிழக்கு பகுதி | திருவள்ளுவர் திருமண மண்டபம், பெரியார் நகர் |
| 04.09.2024 (புதன்) | மாலை 4.00 மணி | திரு.வி.க.நகர் தெற்கு பகுதி | சமூக நலக்கூடம் 76வது வட்டம் |
| | மாலை 5.00 மணி | வில்லிவாக்கம் கிழக்குபகுதி | காமராஜர் அரங்கம், சௌந்திர பாண்டியன் மேல்நிலைபள்ளி, அயனாவரம் |
| 05.09.2024 (வியாழன்) | மாலை 5.00 மணி | அம்பத்தூர் கிழக்கு பகுதி | மீனா மஹால், முருகன் கோயில் தெரு, விவேகானந்தர் நகர், கொளத்தூர். |
| 06.09.2024 (வெள்ளி) | மாலை 5.00 மணி | துறைமுகம் மேற்கு பகுதி | கன்னிகா பரமேஸ்வரி கல்லூரி |
| | மாலை 6.00 மணி | கொளத்தூர் மேற்கு பகுதி | நால்வர் திருமண மாளிகை எஸ்.ஆர்.பி.கோயில் தெரு, அகரம். |
| 09.09.2024 (திங்கள்) | மாலை 7.00 மணி | துறைமுகம் கிழக்கு பகுதி | ஹயாத் மகால், பிராட்வே |
| | மாலை 8.00 மணி | வில்லிவாக்கம் மேற்குபகுதி | இராஜஇராஜேஸ்வரி திருமண மண்டபம், முதல் பிரதான சாலை, சிட்கோநகர், வில்லிவாக்கம். |
| 11.09.2024 (புதன்) | மாலை 5.00 மணி | திரு.வி.க.நகர் வடக்கு பகுதி | சமூகநலக்கூடம் வா.ஊ.சி.நகர், 1வது தெரு |

மேற்கண்ட கூட்டங்களில், சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட, மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் அனைவரும் அந்தந்த பகுதிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

## அண்ணா சாலையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்த

# காவல் துறை உதவி ஆணையரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, செப்.1**

**சென்னை அண்ணாசாலை மன்றோ சிலை அருகில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்த காவல்துறை உதவி ஆணையரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

சென்னை திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆணையராக பணியாற்றிவந்த திரு. சிவகுமார் (வயது 53) நேற்று (31.8.2024) பகல் சுமார் 12.45 மணியளவில் சென்னை அண்ணா சாலை மன்றோ சிலை அருகில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்த நிலையில் சிகிச்சைக்காக இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

காவல்துறை உதவி ஆணையர் சிவகுமார் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சிவகுமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

# அம்பத்தூர் வடக்குப் பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, செப்.1-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் (ம) சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார் என பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு :-

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, இந்து சமய அறநிலையத்துறை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்டசெயலாளர் பி.கே. சேகர்பாபு ஆலோசனையின்படி அம்பத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப்சாமுவேல் தலைமையில் நாளை (02.09.2024 - திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி வார்டு 86ல் அமைந்துள்ள எச்.பி.எம். பேரடைஸ்யில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று ஆலோசனைகள் வழங்குகிறார்.

எனவே இக்கூட்டத்தில் அம்பத்தூர் வடக்கு பகுதி உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், BLA 2, BLC, உறுப்பினர்கள் மற்றும் வட்ட நிர்வாகிகள் பொது உறுப்பினர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.